Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 தை 05 வெள்ளிக்கிழமை (19.01.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 31

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# கண்காணிப்புக்குழுவின் கூற்றுக் குறித்து விளக்கமளிக்குமாறு புலிகள் கோரிக்கை



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் விடுதலைப்புலிகள் மிகப் பெரும் தாக்குதலுக்கு தயாராகி வருகின்றனர் என்றும் தென்னிலங்கையின் நிலைமையைப் பொறுத்து அவர்களின் தாக்குதல்கள் ஆரம்பமாகலாம் என இலங்கைபோர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளமை குறித்து அவர்களிடம் விளக்கம் கேட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் இரு முகாம்களை அதிரடிப்படை கைப்பற்றியது

அம்பாறை கஞ்சிகுடிச்சாறு பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கை காரணமாக விடுதலைப்புலிகளின் மேலும் இரண்டு சிறு முகாம்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை இவ் இரண்டு முகாம்களும் கைப்பற்றப்பட்டதாகவும் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஏ)

## வட–கிழக்கு பிரச்சினையை தீர்க்க ஸ்திரமான அரசாங்கம் தேவை

### அமைச்சர் மைதிரிபால சிறிசேன தெரிவிப்பு

வடக்கு–கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வு மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கு ஸ்திரமான அரசாங்கம் ஒன்று அவசியமென அமைச்சர் மைதிரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்திரமான அரசாங்கம் ஒன்று அமைக்கப்படாமல் வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியாது என அவர் கூறினார். ஜே.வி.பியினர் அரசுக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறினர்.எனினும் அவர்கள் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளவில்லை.

இந் நிலையில் கொழும்பிலிருந்து போராடியபோதிலும் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியாது என அவர் கூறினார். இதனால் பெரும்பான்மைப் பலம் கொண்ட அரசு ஒன்றை அமைக்க கூடிய கவனம் செலுத்தப்பட்டதாக அவர் கூறினார். (சு)

## நிபந்தனைகள் எதுவும் இன்றி அரசுடன் இணையும் எண்ணமில்லை

### முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிபந்தனைகள் எதுவுமின்றி இணையவுள்ளதாக வெளியான செய்திகளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மறுத்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் கட்சி அங்கத்தவர்களிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

இது முற்றிலும் தவறானது என தெரிவித்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாம் கட்சியையும் கொள்கையையும் கைவிட்டு தனிக்கட்சியாக முடிவெடுக்கப் போவதில்லை எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து அரசதரப்பினரிடமிருந்து பதில் கிடைத்தபின்பே தமது கட்சியின் அரசியல் அதி உயர் பீடம் கூடி அரசுடன் இணைவது குறித்து இறுதி முடிவெடுக்கப்படும்எனவும்தெரிவிக்கப்பட்டது.(ஓ)

## நாகர்கோயிலில் சிப்பாய் பலி

நாகர்கோயில் பகுதியில் இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் விடுதலைப்புலிகள் நடத்திய மோட்

# வடக்கு-கிழக்கு மாகாணங்கள் முன்னரே பிரிக்கப்பட்டிருந்தன

நாகர்கோயில் பகுதியில் இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் விடுதலைப்புலிகள் நடத்திய மோட்டார்த் தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் பலியாகினார். மற்றொருவர் காயம டைந்தார். இராணுவத்தினர் இதற்கான பதில் தாக்குதலை நடத்தினர் என தேசிய பாதுகாப்புக்கான தகவல் மையம் செய்தி வெளியிட் டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு வவுணதீவுப் பகுதியிலும் இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் விடுதலைப்புலிகள் 81 மி.மி.மோட்டார்த் தாக்குதல் நடத்தியதாகவும் இதற்கான பதில் தாக்குதலை இராணுவத்தினர் மேற்கொண்டதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5,9)

# முன்னரே பிரிக்கப்பட்டிருந்தன

## பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்கள் வரலாற்றிலிருந்து பிரிக்கப்பட்டே இருந்தன. இதற்கான ஆதாரங்கள் உள்ளன. நாங்கள் அண்மையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தொடர்பில் சில தீர்மானங்கள் எடுத்திருந்தாலும் வடக்கு கிழக்கு ஆதிகாலத்திலிருந்தே பிரிக்கப்பட்டே காணப்பட்டன என்று பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்தார்.

சேருவில விகாரை உலக மரபுரிமை செயல் திட்டத்தின் கீழ் யுனஸ்கோ அமைப்பினால் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

அந்த வகையில் செருவில விகாரை தொடர்பான விபரங்கள் அடங்கிய உத்தியோக பூர்வ இணைய தளத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் இடம் பெற்றது.

இங்கு கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த பிரதம நீதியரசர் மேற்கண்டவாறு கூறினார். இங்கு அவர் மேலும் கூறியதாவது; நாட்டின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் வரலாற்றிலிருந்து பிரிக்கப்பட்டு இருந்தன.

அதனை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் உள்ளன. வரலாற்றை நாம் பார்க்க வேண்டும். நாங்கள் அண்மையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தொடர்பில் சில தீர்மானங்களை எடுத்திருந்தோம். (04 ஆம் பக்கம் பார்க்க)

# மோட்டார் சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் ஸ்தலத்தில் பலி

(மருதங்கேணி)

நேற்று முன்தினம் மணற்காட்டுச் சந்தியில் இடம் பெற்ற விபத்தில் ஒருவர் ஸ்தலத்தில் பலியானதுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இருவரும் பருத்தித்துறையில் இருந்து மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மரம் ஒன்றுடன் மோதியதில் இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் தியோகுப்பிள்ளை லோமிநாதன் (வயது 57) என்பவர் சம்பவ இடத்தில் பலியானார். மருதலிங்கம் உதயகுமார் படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் மரண விசாரணையை நேற்று பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அரியநாயகம் மேற்கொண்டார்.

பிரேத விசாரணை யின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப் படைக்குமாறு அவர் உத்தரவிட்டார். (ச-9,35)

# பிரச்சினையை தீர்ப்பதற்கு கட்சிகளிடையே போர்நிறுத்தம் மேற்கொள்ள வேண்டும்

## எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

நாட்டில் பிரதான பிரச்சினையை தீர்த்து வைப்பதற்காக நாம் முதலில் கட்சிகளுக்கிடையில் அரசியல் போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும். அதன் அடிப்படை யிலேயே ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்துடன் புரிந்துணர்வு உடன் படிக்கையில் கைச்சாத்திட்டது.

அந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி செயற்படுமாறு சர்வதேச சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது. அந்த கடமையை நிறைவேற்ற ஐக்கிய தேசியக்கட்சி தயாராகவுள்ளது. இதனை நாங்கள் தெளிவாக கூறிவிட் டோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 5 வருடங்களுக்கு மேல் ஒரே பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

## விரைவில் அமுலாக்கப்படுமெனத் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐந்து வருடங்களுக்கு மேல் ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக சேவையாற்றிய ஆசிரியர்கள் அனைவரையும் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளை வெகு விரைவில் மேற்கொள்ளவுள்ளதாக மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வலயங்களுக்குள் உள்ள பாடசாலைகளுக்குள்ளேயே இவ்விடமாற்றங்கள் இடம்பெறவுள்ளன. ஆசிரியர் இடமாற்றத்திற்கான தேசிய பாடசாலை கொள்கைக் கல்வி அமைச்சினால் நீக்கப்பட்டுள்ளது.

இதற்கான சுற்று நிருபங்கள் எதிர்வரும் சில வாரங்களில் வெளியிடப்படவுள்ளன. அதன் பின்னரே ஆசிரியர் இடமாற்றங்களும் நடைபெறும்.

சில ஆசிரியர்கள் முதல் நியமனத்திலிருந்தே பல தசாப்த காலமாக ஒரே பாடசாலையில் சேவையாற்றுகின்றனர். எந்தவிதப் பாகுபாடுமின்றி இவ்வருடம் ஆசிரியர் இடமாற்றங்கள் இடம்பெறும் எனவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். (ச-5)

# உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் திட்டமிடல், கல்வி முகாமைத்துவம் ஆகிய பிரிவுகளிற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை கல்வி நிர்வாக சேவை அல்லது இலங்கை அதிபர் சேவை தரம் I ஆகியவற்றைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலய அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

# மாணவிகளுக்கு சத்துணவு

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் ஆண்டு ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புவரை கல்வி பயிலும் மாணவிகளுக்குப் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதாதேவி சேவாச்சிரமத்தின் அனுசரணையுடன் பிரதி வெள்ளிக்கிழமைகள் தோறும் பால் வழங்கப்பட்டு வருகின்றது. (து)

# கல்வியியலாளர் சேவை தரம் III

## வடக்குக் கிழக்கு விண்ணப்பதாரிகளின் நேர்முகப் பரீட்சைக்கு விசேட ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கைக் கல்வியியலாளர் சேவை தரம் III பதவிக்கான நேர்முகப் பரீட்சையில் தோற்ற வடக்குக் கிழக்கைச் சேர்ந்தவர்கள் கொழும்பு வரும் பொருட்டு எதிர்கொள்ளும் போக்குவரத்து வசதிக் குறைவை கருத்திற் கொண்டு அவர்களுக்கு பெப்ரவரி முதல் வாரம் வரை அப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விசேட ஏற்பாடுகளை கல்வியமைச்சு செய்து கொடுத்துள்ளது.

கல்வியியலாளர் சேவை தரம் III பதவிக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி வரை நடைபெற்று வருகின்றன.

இப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து 140 பேர் வரை தோற்றவுள்ளனர்.

எனினும் போக்குவரத்து வசதி குறைவுகளால் தமக்கென ஒதுக்கப்பட்ட திகதியில் நேர்முகப்பரீட் சைக்குத் தோற்ற கொழும்பு செல்ல முடியாமல் அவர்கள் திண்டாடி வருகின்றனர்.

அவர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு பெப்ரவரி முதல் வாரம் வரை தமக்கு சாத்தியமான நாளில் இந்நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற அவர்களுக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் கொழும்பு வந்தடைந்ததும் கல்வியமைச்சில் உரிய பிரிவுடன் தொடர்பு கொண்டு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம் என கல்வியமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# கணனி மயப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை

## அடுத்த வருடம் முதல் அமுல்

(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் கணனி மயப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் புழக்கத்திற்கு வரவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான கணனி வலையமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் திணைக்களத்தின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகள் விசேட நிபுணர்களின் ஆலோசனையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாட்டிலுள்ள பிரதேச செயலகங்கள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் வகையில் இந்த் வலையமைப்பு அமைக்கப்பட்டு வருவதாகவும் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய திட்டத்தின் கீழ் தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கான விண்ணப்பங்களிலுள்ள தகவல்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக கணனி மயப்படுத்தப்படும்.

பின்னர் பிரதான செயலகத்தினால் அதன் தகவல்கள் திரட்டப்பட்டு அடையாள அட்டைகள் விநியோகத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சர்வதேச தரத்திற்கு ஏற்ப பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் புதிய திட்டம் அமுலுக்கு வந்ததும் இதுவரை வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டைகள் அனைத்துக்கும் புதிய அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதாக ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்பொழுது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வர்ணப் புகைப்படத்திலான தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-9)

# எஸ்.எல்.ஐ.டி.ஏ இன் தடைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் (எஸ்.எல்.ஐ.டி.ஏ) நடாத்தப்படும் அபிவிருத்தி இணைப்பாளர்களுக்கான இரண்டாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சை மேற்படி எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சையில் தோற்றவிருக்கும் யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி இணைப்பாளர்களுக்கான அனுமதியட்டைகள் ஏற்கனவே தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதியட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்துடனும் யாழ்.மாவட்ட செயலகத்துடனும் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி அறிவித்துள்ளார். (ச)


# பிரத்தியேக பாதுகாப்புச் சேவை 2007 இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு)

இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு) சாலைகளிற்கான 01.04.2007 தொடக்கம் 31.12.2007 வரையான காலப்பகுதிக்கான பாதுகாப்புக் கடமைக்காக பிரத்தியேக பாதுகாப்புச் சேவையினரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதன் விபரம் வருமாறு;

| | | | | |
|---|---|---|---|---|
| 01. யாழ் சாலை | காலை | 0600 - 1800 | - | 05 பேர் |
| | மாலை | 1800 - 0600 | - | 06 பேர் |
| 02 யாழ் பேருந்து நிலையம் | காலை | 0600 - 1800 | - | 03 பேர் |
| | மாலை | 1800 - 0600 | - | 02 பேர் |
| 03. மல்லாகம் வேலைத்தளம் | மாலை | 1800 - 0600 | - | 01 ஆள் |
| 04. பருத்தித்துறைச் சாலை | காலை | 0600 - 1800 | - | 03 பேர் |
| | மாலை | 1800 - 0600 | - | 03 பேர் |
| 05.காரைநகர்ச் சாலை | காலை | 0600 - 1800 | - | 03 பேர் |
| | மாலை | 1800 - 0600 | - | 03 பேர் |
| 06.மன்னார் சாலை | காலை | 0600 - 1800 | - | 04 பேர் |
| | மாலை | 1800 - 0600 | - | 04 பேர் |

ஒவ்வொரு சாலைகளிலும் பாதுகாப்புக் கடமை புரிவதற்கு ஒரு நாளைக்கு 12 மணித்தியாலங்களுக்கு ஒரு வருடைய வேதனத்தைக் குறிப்பிடவும்.

விண்ணப்பிக்க விரும்புவர்கள்

01. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'Private Security Service from 01.04.2007 to 31.12.2007' எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் 'The Secretary, Tender Board, Sri Lanka Transport Board, 200, Kirula Road, Colombo-05' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

02. சேவைகள் திருப்தியற்றதாகக் காணும் பட்சத்தில் ஒருமாத கால முன்னறிவித்தலுடன் சேவை இடைநிறுத்தம் செய்யப்படும்.

03. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நகல் தகவல்களை விண்ணப்பப் படிவத்தோடு இணைத்தல் வேண்டும்.

01.பெயரும் விலாசமும்.
02. தொலைபேசி இலக்கம்.
03.சேவைப்பதிவின் இலக்கமும் திகதியும்.
04. சேவையின் தன்மை.
05. பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக் கடிதம்.
06. வங்கியின் பெயர்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2007.02.15

*குறிப்பு:* கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவு செய்யும் பெயரிலேயே வழங்கப்படும்.

க.கணேசபிள்ளை,
பொது முகாமையாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு),
கோண்டாவில்.

(c-595)


# அரச ஊழியர்களின் இரண்டாம் மொழி திறன் விருத்திக்கு அரசு நடவடிக்கை

(கொழும்பு)

அனைத்து அரச ஊழியர்களும் இரண்டாம் மொழியான தமிழ் அல்லது சிங்களத்தினை அறிந்திருக்க வேண்டுமென சட்டம் கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கான அனுமதி உரிய அமைச்சுக்களிடமிருந்து பெறப்பட்டதாகவும் இதற்கான சுற்றறிக்கை இம்மாத இறுதியில் வெளியிடப்படும் எனவும் அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் டீ.திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் இவ்வாண்டு இடம்பெறும் மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்கு அனைத்து அரச ஊழியர்களும் தோற்ற வேண்டுமெனவும் இதற்காக மொழி அமுலாக்கல் ஆணைக்குழுவினால் தரங்களிலான பரீட்சைகள் இடம்பெறுமெனவும் மேற்படி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ச)

# அரச ஊழியர்களுக்கான கடன் வட்டி வீதம் அதிகரிப்பு

அரசதுறை ஊழியர்களுக்கு வழங்கப்படும் சொத்து கடன்களுக்கான வட்டி வீதத்தை 10 வீதத்திலிருந்து 11 வீதமாக மத்திய வங்கி அதிகரித்துள்ளதாகப் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் டி.திஸநாயக்க அறிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்காகத் திணைக்களத்திடமிருந்து 7 வீதம் கடன் பெற்ற ஊழியர்களிடமிருந்து 4 வீதமும் அறவிடப்பட்டு கடன் வழங்கிய வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இச் சொத்துக் கடன்களுக்கான அதிகரித்த வட்டி கடந்த வருடம் நவம்பர் மாதம் தொடக்கம் அமுலுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# போக்குவரத்துச் சபையின் இளைப்பாறிய ஊழியர்களுக்கு

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் 31.12.2005 க்கு முன்னர் கடமையாற்றி இளைப்பாறிய ஊழியர்களுக்கான பணிக்கொடை கொடுப்பனவின் ஐம்பது வீதத்தை வழங்குவதற்கான நிதி போக்குவரத்துச் சபையின் தலைமைக் காரியாலயத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் தலைமைக் காரியாலயத்திற்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். (ச)


# சிறு விளம்பரம்

## *தவறிவிட்டது*

கோபிதர்ஷன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (873062037 V) 29.12.2006 நெல்லியடிக்கும் புற்றளை மகா வித்தியாலயத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 021 222 4236 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (c-583)

நியாயத்திற்காகவும் தர்மத்திற்காகவும் ஒன்றுபட்டு தீமையை எதிர்த்து நிற்கத் தயாராகவேண்டும்.

*-சாக்ரட்டீஸ்*

வலம்புரி

## சதாமுக்கு வழங்கிய தீர்ப்பு யாழ்.குடாநாட்டுப் பத்திரிகைகளுக்கும்

ஏ-9 பாதை மூடப்பட்டதன் பின்னர் குடாநாட்டிற்குத் தேவையான உணவுப் பொருள்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருள்களுக்கும் மிகப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படும் உணவுப் பொருள்களின் கிடைப்பனவு போதுமானது அல்ல என்பதற்கப்பால்,

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்கான அச்சிடும் தாள், மை உள்ளிட்ட அனைத்து உள்ளீட்டுப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பத்திரிகைத் தாள்கள் உள்ளிட்ட அச்சிடும் பொருள்களின் தேவைப்பாடுகுறித்து முன்கூட்டியே யாழ்.அரச அதிபருடாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் வரை தெரியப்படுத்தியிருந்தும் இதுவரை எதுவித நடவடிக்கைகளு‌ம் எடுத்தபாடாகவில்லை.

இன்னமும் சில தினங்களுக்கே பத்திரிகைத்தாள்கள் போதுமானதென்ற நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் மூன்று பத்திரிகைகளும் செயலிழக்கும் தருவாயில் உள்ளன.

இதில் பரிதாபம் என்னவெனில், பத்திரிகைத் தாள்களின் தட்டுப்பாடு-அதைப் பெற்றுக் கொடுப்பதில் காட்டப்படும் அசமந்தம் என்பன பற்றி குடாநாட்டுப் பத்திரிகைகள் செய்தி வெளியிடுவதற்கே தயங்குகின்றன.

கொழும்புப் பத்திரிகைகள் மற்றும் புலிகளின் குரல், தமிழ் நெற், லண்டன் பி.பி.ஸி. போன்ற ஊடகங்கள் யாழ்ப்பாணப் பத்திரிகைகள் படும் அவஸ்தை பற்றி குரல் கொடுத்த அளவிற்கு குடாநாட்டுப் பத்திரிகைகள் மௌனம் காப்பது எதற்காக? என்று தெரியாமலே உள்ளது.

ஒரு பத்திரிகை குரல் கொடுப்பதன் மூலம் மற்றைய பத்திரிகை நிறுவனங்களும் தளிர் விட்டுவிடும் என்ற அழுக்காற்றின் தன்மையோ என்றுகூட எண்ணத் தோன்றுகின்றது. அந்தளவிற்கு நிலைமையுள்ளது.

இதைவிட குடாநாட்டுப் பத்திரிகைகளுக்கு இடையேயான ஒற்றுமையீனமும் ஒருமித்துக் குரல் கொடுப்பதில் தடைவிதிக்கின்றதெனலாம்.

இன்றைய சூழ்நிலையில் குடாநாட்டுப் பத்திரிகைளுக்கிடையேயான ஒற்றுமையின் அவசியம் பற்றிப் பல தடவைகள் இப் பகுதியில் சுட்டிக்காட்டியிருந்தும் அதுபற்றி யாருமே அலட்டிக் கொண்டதாகவில்லை.

குடாநாட்டுப் பத்திரிகைகளுக்கிடையே ஒற்றுமைத்தனம் இருந்திருக்குமாயின், பத்திரிகை உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வதில் இருக்கக் கூடிய தடைகள், இடைஞ்சல்களை வெற்றி கொண்டிருக்க முடியும்.

இப்போது பத்திரிகைகத் தாள்களின் கிடைப்பனவு சாத்தியப்படாது என்பதும், பத்திரிகைத் தாள்களைப் பெற்றுக் கொடுக்காமல் விடுவதன் மூலம் குடாநாட்டுப் பத்திரிகைகளின் உயிர் மூச்சை அடைக்கி விடும் திட்டமும் நடைபெறுகின்றது என்பதும் தெளிவாகின்றது.

சுருங்கக் கூறின் சதாம் ஹூசைனுக்கு விதிக்கப்பட்ட தண்டனை குடாநாட்டுப் பத்திரிகைகளுக்கும் விதிக்கப்பட்டு விட்டதெனலாம்.

ஊடகவியலாளர்கள்-ஊடகங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூறும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இது விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு குடாநாட்டுப் பத்திரிகைகள் தொடர்ச்சியாக வெளிவருவதற்கு உதவ வேண்டும்.

இதுவிடயத்தில் ஊடகங்களும் ஊடகம் சார்ந்த அமைப்புக்களும் ஒட்டுமொத்தமாகக் குரல் கொடுப்பது கட்டாயமானதாகும்.

இன்றைய சூழ்நிலையில் குடாநாட்டுப் பத்திரிகைகளின் மூச்சு அடங்கிப் போகுமாகவிருந்தால் அதன் ஆபத்தை மனித மொழிகளால் வர்ணிக்க முடியாது என்பதை மட்டுமே இப்போ- இப்போதைக்குக் கூற முடியும்.

இதேநேரம் பத்திரிகைத் தாள்களின் தேவைப் பாடு குறித்து யாழ்.அரச அதிபருக்குத் தெரியப்படுத்தியும், அது தொடர்பில் மேலதிகாரிகளுக்கு அவர் அறிவித்திருந்தும் பத்திரிகைத் தாள்கள் எடுத்து வரப்படவில்லையாயின், அதனைத் தடை செய்வது யார்? எங்கே அந்தத் தடையுள்ளது என்பதை அரச அதிபர் தெளிவுபடுத்துவதும் அவசியமானதாகும். இவை உடனடியாகச் செய்யப்பட வேண்டியவையே.



# கட்சித் தாவல்களை அரசு ஊக்குவித்தால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பாதிக்கும்



## ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

அரசுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும்இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் அந்தரத்தில் தொங்கியுள்ள நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்சித் தாவலை அரசு ஊக்குவித்தால் இரு கட்சிகளினதும் புரிந்துணர்வில் கடுமையான பின்விளைவுகள் ஏற்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ரணில் விக்கிரமசிங்க கடிதம் அனுப்பியுள்ளார்.

கேம்பிரிட்ச் றெரசில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி அலுவலகத்தில் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்த ரணில் விக்கிரமசிங்க தமது கட்சி உறுப்பினர்களின் கட்சித் தாவல், கட்சியின் மறு சீரமைப்புத் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

மேலும் உறுப்பினர்களின் கட்சித் தாவல் தொடர்பாக மகிந்தவுக்குத் தான் கடிதம் ஒன்றை எழுதப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சந்திப்புத் தொடர்பாகவும் தனது கட்சி உறுப்பினர்களுக்கு விளக்கமளித்தார். மேலும் விரைவில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தப் போவதில்லை என அரசுக்கு ஆதரவு தரும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு மகிந்த உறுதியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசுக்கு ஆதரவளிப்பதற்குரிய அனைத்துப் பேச்சுக்களும் நிறைவடைந்து விட்டன. இனப்பிரச்சினையை விரைவில் தீர்ப்பதற்கு அரசை நிர்ப்பந்திக்க உள்ளோம். ஐக்கிய தேசியக் கட்சியின் அணியாகவே நாம்அரசில் செயற்படுவோம் என அரசில் இணையும் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. ஒருவர் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்;

எனக்கு மிகவும் வயதாகி விட்டது. எனவே எனது இந்தப் பொன்னான இறுதிக் காலத்தை எதிர்க்கட்சியிருந்து கழிக்க விரும்பவில்லை. அரசுக்கு ஆதரவு தர தீர்மானித்துள்ளேன். எனது இறுதிக் காலப் பகுதியில் ஓர் அமைச்சராகவிருந்து மக்களுக்குச் சேவை செய்ய எண்ணியுள்ளேன் எனக் கூறினார். (எ-1)

# அவுஸ்திரேலிய விசாரணைக்குழு விசாரணை முடியாது திரும்பியது

திருகோணமலை மூதூரில் இயங்கி வந்த பட்டினிக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்கும் பிரான்ஸ் மனித நேய நிறுவனத்தின் (அக்ஷன் பாம்) 17 ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்த விசேட பிரேத பரிசோதனை ஆய்வுக் குழு ஒன்று இலங்கை வந்திருந்தது.

இலங்கை வந்த இந்த விசேட விசாரணைக் குழுவினர் இருபது நாட்கள் தங்களது முயற்சிகளை மேற்கொண்டனர். விசாரணை செய்யும் நபர்கள் சாட்சியம் சொல்ல முன்வரும் நபர்களின் முழு விபரங்களும் அரச பிரதிநிதிகளிடம் வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதித்ததுடன் அப்படிச் சாட்சி சொல்ல முன்வருவோருக்கு எந்தப் பாதுகாப்பையும் தாம் வழங்கப் போவதில்லை என்றும் அரசு திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது.

அவுஸ்திரேலியாவிலிருந்து தாம் வந்தது மரண அறிக்கை கொடுப்பதற்காக அல்ல என்று தெரிவித்த இந்த பிரதிநிதிகள், ஓகஸ்ட் 4 ஆம் திகதி இடம்பெற்ற படுகொலைகள், அனைத்துலகப் போர்க் குற்றமாகக் கருதப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இதன் சூத்திரதாரிகள் யார் என்பதை கண்டறியும் தங்களது முயற்சிகளுக்கு அரசு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றும் கூறினர். இதனால் இவர்கள் எதுவித முடிபுமின்றி கொழும்பிலிருந்து வெறும் கையுடன் அவுஸ்திரேலியா புறப்பட்டனர். (ச)

## போட்டிப் பரீட்சை

(கொழும்பு)

கிராம சேவையாளர்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் நடைபெறும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் அதற்கான அனுமதியட்டைகள் விரைவில் அனுப்பப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரியில் 2007 ஆம் ஆண்டிற்கான புதிய ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி காலை 9 மணிக்கு மேற்படி கல்லூரியில் நடைபெறும் என யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ். யோகநாதன் அறிவித்துள்ளார். (ச-9)

## 20 ஆயிரம் ரயர்கள் பகிர்ந்தளிப்பு

(யாழ்ப்பாணம்)

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட 20 ஆயிரம் ஆண்களுக்குரிய சைக்கிள் ரயர்கள் இன்று யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையின் விகிதாசாரத்தினை அடிப்படையாகக் கொண்டு ஐந்து வலயங்களுக்கும் வழங்கப்படவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

யாழ்.வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சைக்கிள் ரயர்கள் இன்று அவ் வலயத்திற்குட்பட்ட மூன்று கோட்டங்களுக்கும் வழங்கவுள்ளதாகவும் இவற்றினைப் பாடசாலை அதிபர்கள் தமது கோட்ட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் ஏனைய பிரதேசப் பாடசாலை மாணவர்களுக்கு வலயங்களிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-3)

# வெள்ளி நற்சிந்தனை

## நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

மனித வாழ்க்கையில் துன்பத்தைத் துடைத்தெறிய வழி தேடும் காலமிது. வாழ்க்கை யென்பது சோகத்தைச் சுமப்பது தானா? பலருடைய உள்ளத்திலே எழும் இந்த வினாவுக்கு விடை தேடிய போது விழியில் பட்ட சிலவரிகள்... அதை மீண்டும் ஊன்றிப் படித்தபோது ஒரு ஒளிச்சிதறல் தோன்றியது. ஏறக்குறைய 1800 ஆண்டுகளுக்கு முன் தமிழிலே தோன்றிய 'நாலடியார்' என்ற பாடல்களின் சுவையை உணர்ந்த ஒரு பிறமொழியாளர், துறவி Dr.G.U.Pope அந்நூலின் முகவுரையில் எழுதிய வரிகள்!...'சிறந்த ஒழுக்கத்தில் மிகப் பற்றுள்ள மக்களாவார் தனிப்பட்ட பேரின்பத்தை எய்துவார்களென நான் கருதுகிறேன். அன்னாரை இவ்வழியில் நிலைநாட்டியது திருக்குறளும் நாலடியுமே ஆகும்'

நாளாந்த வாழ்வியலில் ஓர் ஒழுங்கைக் கடைப்பிடித்து காலத்தோடு இயைபுபட்டு நின்று இயற்கையோடு இணைந்து சென்ற நமது முன்னோர்களின் பட்டறிவு பாடலாக அமைய அது பிறநாட்டுத் துறவிக்குப் பேரின்பத்தைக் காட்டியது. அந்த இன்பத்தை நாமும் ஏன் அநுபவிக்க முடியாது? மீண்டும் குறளையும் நாலடியையும் மனதில் பதிய வைக்கும் புதிய முயற்சியை மேற்கொண்டால் என்ன? முன்னரே கற்றவர் உள்ளத்தில் உவகை பிறக்கும்! இளையவர் எண்ணத்தில் தேடல் ஏற்படும்! சிறுவர் விழிகள் வியப்பால் விரியும்! அதைச் செயற்படுத்தக் காலமும் எம்மைக் கைநீட்டி அழைக்கிறது. எனவே காலம் தாழ்த்தாமல் தகவல் களஞ்சியத்திலிருந்து பங்கீடு செய்ய முற்படுவோம்.

வாழ்க்கையில் பிறப்பு இறப்பு என்ற இரு நிகழ்வும் நன்கறியப்பட்டவை. அதனை நாலடி வரிசைப்படுத்திக் கூறுகிறது. வாழ்வின் செல்நெறியை, இடையே நாம் காணும் தரிப்பிடங்களை அது விளக்குகிறது. இந்தச் செல்நெறியில் எதிர்கொள்ளும் அல்லல்களைப் பற்றி எண்ணி மனம் நலியாதிருக்க ஒரு மருந்துண்டு.

எமக்கு முன்னே சாநாள் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வாழ்வின் பின்னே மூப்பு நிற்கிறது. இதற்கு இடையே எமது பீடழிக்கும் நோய்கள் வந்துநிற்கும். இந்த நிலைகளை மனத்தில் ஆழப்பதிவு செய்து கொள்ளுங்கள். அதனால் பயனில்லாத செயல்களைச் செய்யாதீர்கள். பொருளில் பற்றுவையாதீர்கள். இருப்பவற்றைப் பகுத்துண்ணுங்கள். அது மட்டுமன்றிப் பொருள் கிடைக்கும் போது அதைக் கரவாது கொடுத்து மகிழுங்கள். இதனால் ஏற்படும் உவகை உடல் நலத்தைச் சீர் செய்யும்! அழகாக்கும்! இளமையான உள்ளத்தையும் உங்களுக்கு நல்கும்! மனத் தில் பதிக்க அந்த நாலடிகளையும் தருகிறோம்.

*'முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள*
*பின்னரும் பீடழிக்கு நோயுள - கொன்னே*
*பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதுங்*
*கரவன்மின் கைத்துண்டாம் போழ்து'*

(நாலடியார்: 92)

# கிழக்கில் தொடரும் படை நடவடிக்கை
# வாகரையை மீட்பதற்கான இறுதிக் கட்ட நகர்வு
## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கில் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற படை நடவடிக்கைகள் வாகரையை மீட்பதற்கான இறுதிக்கட்ட நகர்வாகும். இருந்த போதிலும் விடுதலைப்புலிகள் தாக்குதல்களை நிறுத்தி பேச்சுக்கு வந்தால் நாளையே பேச்சுவார்த்தையினை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராகவுள்ளது என்று தேசிய பாதுகாப்புத் தொடர்பான அரசாங்கப் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

வாகரையில் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற படை நடவடிக்கைகள் வாகரையை மீட்பதற்கான இறுதிப்படை நகர்வாக அமையும் என்பதுடன் படையினர் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்ற போதெல்லாம் பதில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும்.

விசேட அதிரடிப்படையினர் விடுதலைப் புலிகளின் கஞ்சிகுடிச்சாறு முகாமை கைப்பற்றியதன் மூலமாக அரச சார்பற்ற நிறுவனங்கள் விடுதலைப்புலிகளுக்கு உதவி வருகின்றமை நிரூபணமாகியுள்ளது.

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் மீது அரசாங்கம் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் சந்தேகம் கொண்டமை சரியானது என்பது நிரூபணமாகிவிட்டது.

ஈச்சிலம்பற்று உப்பூறல் பகுதிகளில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இடம் பெற்ற மோதல் சம்பவங்களில் 35 படையினர் பலியானதாக ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இது முற்றிலும் தவறான தகவலாகும். இலங்கை இராணுவத்திற்கு சட்டமுறை இருக்கிறது என்பதனால் சமரில் பலியானவர்கள் கட்டாயமாக கணக்கெடுக்கப்படல் வேண்டும் என்பதுடன் பலியாகின்ற இராணுவத்தினரின் உடல்களை அவர்களின் உறவினர்களிடம் கையளிக்க வேண்டும்.

ஹெலன் ரொக்கினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் சர்வதேச சட்டப்பிரச்சினை இருக்கிறது. அவ் அறிக்கையில் மூல தர்மம் இல்லை. பெயர் குறிப்பிட விரும்பாத நபர்கள் நிறுவனங்களின் சாட்சிகளைக் கொண்டே அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஒலரா ஒடுண்ணு 541 சிறுவர்கள் கடத்தப்பட்டுள்ளனர். புலிகளின் அமைப்பில் சிறுவர்கள் இருக்கின்றனர் போன்ற விடயங்களை சரியாகக் குறிப்பிட்டுள்ளார்.

படையினர் சம்பூரைக் கைப்பற்றியபோது அதனை விடுக்கவேண்டுமென்று தமிழ்ச்செல்வன் கடிதம் எழுதியிருந்தார். அதே போல ஸ்டென்லி பேஸுக்கும் கடிதம் எழுதுவார் என நினைக்கிறேன்.

சர்வதேச தொண்டு நிறுவனங்கள் நாட்டுக்கு உதவுதாக கூறுகின்றனர். அதில் எவ்விதமான உண்மையும் இல்லை என்பதை அரசாங்கம் கண்டு கொண்டது என்பதனால் மனித நேயத்திற்காக ஏ-9 வீதியைத் திறப்பது குறித்து புலிகளும் தொண்டு நிறுவனங்களும் தற்போது பேசுவதில்லை என்றார். (ச)

# குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா மருதொத்தஸ்குளம் கத்தோலிக்க தேவாலயத்திற்கு அருகில் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குமார சந்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொல்லப்பட்டவர் ராவார் (வயது 42) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்துடன் தொடர்பான கொலையாளிகள் தொடர்பான தகவல்கள் எதுவும் கிடைக்க வில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# முச்சக்கர வண்டிகளின் இறக்குமதிக்கு தடை

(கொழும்பு)

2 ஸ்ரோக் இன்ஜின்களையுடைய ஆட்டோக்களை இறக்குமதி செய்வதற்கு அரசு தடைவிதித்துள்ளது. இத் தடை அடுத்த வருடம் முதல் அமுலுக்கு வருகின்றது.

சூழலில் வளி மிக மோசமாக மாசடைவதனை தடுக் கும் நோக்குடன் சுற்றுப்புறச் சூழல் அமைச் சர் மைத்திரிபால சிறிசேன முன்வைத்துள்ள சிபார்சுக்கு இலங்கை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பாக நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் ஊடகத்துறை அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டு முதல் 2 ஸ்ரோக் ஆட்டோக்களுக்கான உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் தரவுகளின்படி இலங்கையில் சுமார் 2 இலட்சத்து 80 ஆயிரம் முச்சக்கர வண்டிகள் பாவனையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வருடாந்தம் சுமார் 40 ஆயிரத்துக்கு குறையாத ஆட்டோக்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இவற்றில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யும் 2 ஸ்ரோக் பஜாஜ் ஆட்டோக்கள் அதிகமாக காணப்படுவதாக கூறப்பட்டது. ஆனாலும் 4 ஸ்ரோக் இஞ்சின்களைக் கொண்ட ஆட்டோக்களின் இறக்குமதிக்கு அனுமதிக்கப்பட்டது. (ச)

# இராணுவத்துடனான மோதலில் ஆறு போராளிகள் வீரச்சாவு
## விடுதலைப்புலிகள் அறிவிப்பு

இராணுவத்தினருடன் இடம் பெற்ற இரு வேறு மோதல்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆறு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இராணுவத்தினர் நடத்திய பதுங்கித்தாக்குதலில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த வீரவேங்கை மாதுளன் என்றழைக்கப்படும் சிவானந்தராசா கோபிநாத் ,மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கப்டன் துர்க்காதரன் என்றழைக்கப்படும் விஜயகுமார் சிவாகரன் ,மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கப்டன் ஹேமன் அல்லது கமலன் என்றழைக்கப்படும் திருகேதீஸ்வரன், ஹேமநாதன்,மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வீரவேங்கை இனியவன் என்றழைக்கப்படும் செல்வராசா விமல்ராஜ் ஆகியோர் வீரச்சாவடைந்துள்ளனர்.

முகமாலைப் பகுதியில் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற இராணுவத்தினருடனான நேரடி மோதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வீரவேங்கை விழியன் என்றழைக்கப்படும் கந்தையா கருணாகரன் ,வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வீரவேங்கை ஈழவேங்கை என்றழைக்கப்படும் றஞ்சன் சுசீகரன் ஆகியோர் வீரச்சாவடைந்துள்ளனர் என விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (எ-5)

# கண்காணிப்புக்குழுவின்...

இது குறித்து சிங்கப்பூர் தமிழ் முரசு நாளேட்டுக்கு கருத்துத் தெரிவித்த விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் இந்தத் தகவலை எந்த ஆதாரத்தில் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழு கூறியது என்று தெரியவில்லை.

நாங்கள் அவர்களிடம் விளக்கம் கேட்டுள்ளோம். எனினும் எப்போதுமே தயார் நிலையில் தான் நாம் உள்ளோம் எனக்கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

1970களில் நாம் ஆயுதப்போராட்டத்தை ஆரம்பித்த போது கழுத்தில் மாட்டிய சயனைட்டை இன்னமும் கழற்றவில்லை. மக்களின் பிரச்சினை முழுமையாகத் தீர்க்கப்படும் போதுதான் அதனை நாங்கள் கழற்றுவோம்.

படை ரீதியாகத் தயார் நிலையில் இருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அரசு எங்களைத் தள்ளியுள்ளது. கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி வலிந்த தாக்குதலை படையினர் மேற்கொண்டனர். அந்த தாக்குதல்கள் தொடர்ந்தும் நடக்கின்றன.

அரசின் தாக்குதல்களில் ஏறக்குறைய 80 ஆயிரம் பேர்வரை உயிரிழந்துள்ளனர். எங்கள் மக்களின் பிரச்சினை தீரும் வரை எங்கள் போராட்டம் தொடரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வாகரைப் பகுதியில் மூன்று நிலைகளில் இருந்து படையினர் தீவிர தாக்குதல் நடத்தினர். காலை 5.35 முதல் இரவு வரை இடம் பெற்ற இம் மோதலில் படையினர் தரப்பில் 65 பேர் பலியாகியுள்ளனர். 25 பேர் மிக மோசமாக் காயமடைந்துள்ளனர்.

நூற்றுக்கும் அதிகமானவர்கள் ஓரளவு காயமடைந்துள்ளனர். எமது தரப்பில் 12 போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர். ஏழு பேர் காயமடைந்தனர். குடிமக்கள் வாழும் பகுதிகளில் சுப்பர் சொனிக் விமானங்கள் சென்று குண்டு வீச்சை நடத்தின என்றார்.

கிழக்கில் மட்டக்களப்பு எங்களது வலுவான நிலை, அம்பாறையில் நாங்கள் நகரும் முகாம்களையே வைத்துள்ளோம். இங்கே எங்கள் இடங்களைப் பிடித்திருப்பதாக சொல்வது நகைப்புக்கிடமானது. திருகோணமலைப் பகுதியில் மோதல் தொடர்கிறது என இளந்திரையன் தெரிவித்துள்ளார். (ச-5)

# முஸ்லிம்கள் இன்று பேரணி

(கொழும்பு)

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 16 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு இன்று பேரணி ஒன்று நடைபெறவுள்ளது. இன்று காலை 9 மணிக்கு பாலாவியில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வை போருக்கு எதிரான முன்னணி மற்றும் வடக்கு முஸ்லிம்களுக்கான அமைப்பு என்பன கூட்டாக ஏற்பாடு செய்துள்ளன.

இப் பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

# பிரச்சினையைத் தீர்ப்பதற்கு...

விக்கிரமசிங்க தெரிவித்தார். அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் மட்டுமே எமது நாட்டில் புரையோடிப்போயுள்ள வடக்கு கிழக்கு பிரச்சினையைத்தீர்க்க முடியும்.

அன்று அனைவரும் இன மத பேதமின்றி செயற்பட்டதன் காரணமாகவே எம்மால் சுதந்திரத்தைப்பெற முடிந்தது. இனப்பிரச்சினையை ஒரு அரசியல் கட்சியினாலோ அரசாங்கத்தினாலோ தனித்து தீர்த்துவைக்க முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

இருப்பினும் முன்னாள் ஜனாதிபதிகள் இந்தப் பிரச்சினையை தீர்க்க முயற்சிகளை மேற்கொண்டனர். நான் பிரதமராக இருந்த காலத்திலும் பல முயற்சிகளை மேற்கொண்டேன். 1983 ஆம் ஆண்டிலிருந்து ஒரு பிரதான தீர்வொன்று குறித்து பொது இணக்கப்பாட்டிற்குவர எம்மால் முடியாது போயுள்ளது.

இந் நிலையில் இனப்பிரச்சினை தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட இரு பிரதான கட்சிகளுக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த வகையில் ஐக்கிய தேசியக்கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் பொது இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளன.

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வே பொருத்தமானது. மற்றும் அதற்கான வடிவத்தை தயாரிக்க வேண்டும் போன்ற பொது இணக்கப்பாட்டிற்கு இரு பிரதான கட்சிகளும் வந்துள்ளன.

இந் நிலையில் புரிந்துணர்வு உடன்படிக்கையை முன்கொண்டு செல்வதே தற்போதைய பிரதான தேவையாகும். இந் நிலையில் புத்திஜீவிகள் குழுவின் தீர்வு யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினை தொடர்பாக கட்சிகளுக்கிடையில் நிலவுகின்ற இடைவெளி குறைக்கப்படவேண்டும். அனைவரும் ஒருமித்த கருத்துக்கு வரவேண்டும். அரசியல் தீர்வு காண பேச்சுவார்த்தைகளுக்கு தயாராகும் போது அனைத்துக்கட்சிகளும் ஒன்றிணைந்து சர்வதேச சமூகத்தை தெளிவுபடுத்த வேண்டும்.

அரசியல் தீர்வை விரைவில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச சமூகம் இலங்கையை வலியுறுத்தியுள்ளது. அத்துடன் இரு பிரதான கட்சிகளுக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி செயற்படுமாறும் சர்வதேச சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கடமையை நிறைவேற்ற ஐக்கிய தேசியக்கட்சி தயாராகவுள்ளது. இதனை நாங்கள் தெளிவாகக்கூறி விட்டோம். நாட்டின் பிரதான பிரச்சினையை தீர்த்து வைப்பதற்காக நாம் முதலில் அரசியல் போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்றார் ரணில். (ச)

# வடக்கு-கிழக்கு...

இருப்பினும் வடக்கு கிழக்கு மாகாணம் ஆதிகாலத்திலிருந்து பிரிந்து காணப்பட்டன.

அதேவேளை தென்மாகாணத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்குமிடையில் நெருங்கிய உறவுகள் இருந்து வந்தன. அத்துடன் கிழக்கு மாகாணம் பாதுகாக்கப்படவேண்டும். அந்த காலத்தில் கிழக்கு மாகாணத்திலும் குறிப்பாக செருவில பிரதேசத்திலும் யுத்தம் இருக்கவில்லை.

சேருவில் பிரதேசத்திலும் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்தனர். மிக அண்மையிலேயே இப் பகுதியில் யுத்த நிலை ஏற்பட்டது. தேசிய ஒற்றுமையை வலியுறுத்துகின்ற தற்போதைய நிலையில் கிழக்கு மாகாணம் அந்த காலத்தில் இரத்தம் சிந்தாமல் வடக்கிலிருந்து பிரிக்கப்பட்டதை நாம் கருத்திற்கொள்ளவேண்டுமென்றார். (ச)


# மரண அறிவித்தல்
## சின்னத்தம்பி பார்வதி

காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும், காலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பார்வதி நேற்று காலியில் காலமானார். அன்னார் அன்னபாக்கியம் சரஸ்வதி காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (களு மாத்தையா) முருகானந்தம், சிவானந்தராஜா ஆகியோரின் தாய் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்.
பிள்ளைகள்

(C-597)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.